Chezhumai

செழுமை

TIST India

The International Small Group & Tree Planting Program

TIST India: New No.52, Guru Ram Flats, Flat D, Venkat Ratnam Nagar, Adyar, Chennai 600 020, Tamil Nadu, India
Phone : +91 44 42188438 / Mobile: +91 9840299822 / Email: josephrexon@tist.org

Recognition Letter

Letter from Tamilnadu Forest Department

TIST Program is getting good support and guidance from Tamilnadu Forest Department. The DFO of Thiruvallur District visited our project areas and helped us by giving free seedlings to several small groups of Placepalayam Center. Last week, the DFO gave us a good recognition letter on our request. This letter will be of great help in our program expansion. TIST India thanks Mr.S.Kalyana Sundaram, IFS, District Forest Officer (DFO), Thiruvallur Division Thiruvallur for his continuous support, guidance and the recognition letter.

அங்கீகார கடிதம்

தமிழ்நாடு வணத்துறையிடமிந்து கடிதம்

டிஸ்ட் திட்டம், தமிழ்நாடு வனத்துறையிடமிருந்து நல் ஆதரவையும், வழிகாட்டுதலையும் பெற்றுக் கொண்டிருக்கிறது. எங்களது திட்ட பகுதிகளுக்கு திருவள்ளுர் மாவட்ட வன அலுவலர் அவர்கள் சென்று பார்வையிட்டு பிளேஸ்பாளையம் மையத்தைச் சேர்ந்த அநேக அநேக சிறு குழுக்குளுக்கு இலவச விதைக்கன்றுளை வழங்கியதன் மூலம் எங்களுக்கு உதவினார். கூசன்ற வாரம் எங்கள் வேண்டுதலின் பேரில், மாவட்ட வன அலுவலர் அவர்கள் ஒரு நல்ல அங்கீகாரம் அளிக்கும் கடிதத்தை எங்களுக்கு வழங்கினார். இந்த கடிதமானது நமது திட்டத்தின் விரிவாக்கத்திற்கு மிக்க உதவிகரமாக இருக்கும். டீஸ்ட் இந்தியா, திரு.சா. கலியாணசுந்தரம், இ.வ.ப., மாவட்ட வன அலுவலர் (மா.வ.அ) திருவள்ளர் கோட்பம், திருவள்ளுர் அவர்களின் தொடரும் நல்லாதரவு, வழிகாட்டுதல் மற்றும் அந்த அங்கீகார கடிததத்துக்காகவும் நன்றியைக் கூறுகிறது.



Phone : 27660487

Tamil Nadu Forest Department

From

Thiru S. Kalyanasundaram, IFS.,
District Forest Officer,
Tiruvallur Division,
Tiruvallur

To

TIST- India Co-Ordinator,
TIST-Tree Planting India Pvt. Ltd,
New No. 52, Guru Ram Flats, Flat D,
Venkat Ratnam Nagar,
Adyar, Chennai 600 020

Ref.No. L/8374/07 Dt. 7.01.08

Sir,

Sub : Request for getting a certificate on TIST India Activities in Tiruvallur District – Regarding.

Ref : 1) Your Ref.No. TIST India/EC/22/07 Dt. 11.12.07
2) Forest Ranger, Tiruvallur Ref.No. 540/07 Dt. 29.12.07

&&&&

The certificate requested in the reference first cited is furnished as follows:

CERTIFICATE

"Certified that the tree planting activities done by the TIST - India Private Limited in Tiruvallur District have been inspected in the villages viz., Placepalayam, T.B.Puram, Seethanjeri, Katchur, Athulavakkam, Venkatapuram, Rasapalayam, Kammavarpalayam, Pudukandigai and Sendrayanpalayam along with the members of the TIST on 29.12.07 and they have planted species such as Mango, Jack, Teak, Lemon, Cashew etc., in the lands of group members of TIST and maintained well"

07 JAN 2008

Yours faithfully,

District Forest Officer,
Tiruvallur Division,
Tiruvallur

சான்றிதழ்

டிஸ்ட் இந்தியா தனியார் கழகத்தால் திருவள்ளுர் மாவட்டத்தில் செய்யபட்டிருக்கிற மரவளர்ப்பு செயல்பணிகள் கிராமங்களில் அதாவது பிளேஸ்பாளையம், திம்மபுபாலபுரம், சீத்தஞ்சேரி, கச்சூர் அதுலவாக்கம், வெங்கடாபுரம், ராசபாளையம், கம்மவார்பாளையம்,புதுக்கண்டிகை மற்றும் சென்றாயன்பாளையத்தில் 29.12.07 அன்று டிஸ்ட் உறுப்பினர்களுடன் மேற்பார்வை செய்யப்பட்டது. டீஸ்ட் குழு உறுப்பினர்களும் தங்கள் நிலங்களில் மா,பலா,தேக்கு, எலுமிச்சை, முந்திரி முதலியன போன்ற இனங்களை நட்டிருக்கிறார்கள், நன்றாக பராமரிக்கப்படுகிறது என்று சான்றளிக்கப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள
மாவட்ட வன அலுவலர்

Women members Involvement

The Role of Women Members in TIST India

We can breathe clean air by planting trees. Women work is to fill plastic bags with organic soil material and collect seeds. If men fail to water the trees/seedlings, women will have to water. Women take active part in maintaining the seedlings in the nursery. So we have to educate women members in tree planting activities and maintaining nursery. Women look upon growing of trees as growing their children. So they are highly satisfied and happy with their work. We will educate our children also in tree planting activities. Hence, the role of women is very essential in TIST India.

பெண் உறுப்பினர்களின் பங்கு

டிஸ்ட் இந்தியாவில் பெண் உறுப்பினர்களின் பங்கு

நாம் மரங்கள் நடுவதின் மூலம் சுத்தமான காற்றை சுவாசிக்கலாம். பெண்கள் வேலை என்னவென்றால் பிளாஸ்டிக் பையை உயிர்சத்துள்ள மண் கலந்த பொருளையும் விதைகளையும் சேகரித்து நிரப்புவதாகும். ஆண்கள் மரங்களுக்கோ , கன்றுகளுக்கோ நீர் விட தவறினால் பெண்கள் நீர்விட வேண்டியிருக்கும். பெண்கள் விதைக்கன்றுகள் உள்ள அந்த நாற்றங்கால்களை பராமரிப்பதில் செயலாக்க பங்கு எடுக்க வேண்டும். ஆகையால் நாம் பெண் உறுப்பினர்களளை மரங்கள் நடும் செயலிலும், நாற்றங்கால்களை பராமரிப்பதிலும் நாம் நன்கு கற்றுக் கொடுக்க வேண்டும். பெண்கள் தாங்கள் குழந்தைகளை வளர்ப்பதைப் போலவே மரங்களை வளர்ப்பதையும் பேணுவார்கள். அதனால் தங்களது பணியுடன் மகிழ்வாகவும் மிகவும் திருப்தியுடனும் இருப்பார்கள். நாம் நமது குழந்தைகளுக்குக்கூட மரம் நடும் செயல்பாட்டை கற்றுக் கொடுக்க வேண்டும். ஆகையினால் டிஸ்ட் இந்தியாவில் பெண்களின் பங்கு மிகவும் அவசியமானதாகும்.

Women Members பெண் உறுப்பினர்கள

Natural Technology

Natural Technology Nadep method of making compost

The Nadep method of making miracle compost was first invented by a farmer named N.D. Pandharipande (also popularly known as "Nadepkaka") living in Maharashtra (India). The method, which has become quite popular among the farmers in Western India, now bears his name. The Nadep method of making compost is unique not because it is successful in making good compost, which other methods can also lay claim to; its real secret lies in the large quantities of compost the process can deliver with a minimum of human effort within a specific period of time.

The recommended size of the tank is of the order of 10 ft (length) x 6 ft (breadth) x 3 ft (height). If more material is available for composting, then the length should be increased. However, the breadth should never exceed six feet. The tank can be erected with bricks and with the use of mud mortar. Cement may also be used throughout but this is not necessary. An improvised tank using Bamboo and palm leaves is cost effective. The ground should be compacted with mud and dung to reduce seepage. This tank can accommodate 1350 kg agricultural waste, 90 kg cow dung ,1675 kg fine soil and 1350 litres of water. All these materials are to be kept ready before filling up tank which is to be completed within 1-2 days.

இஹற்கையான தொழில் நுட்பம்

இயற்கையான தொழில் நுட்பம் – நாடெப் முறையில் கலப்பு உரம் (கம்போஸ்ட்) தயாரித்தல்

இந்தியாவில் மஹாராஷ்டிராவில் வாழும் என்டிபண்டாரிபாண்டே (நாடேப்காகா என சாதாரணமாக அழைக்கப்படுகிறார்) என்ற பெயருடைய விவசாயி ஒருவரால் முதலில் இந்த நாடெப் முறையில் கலப்பு உரம் தாயரித்தல் கண்டு பிடிக்கப்பட்டது. இம்முறையானது மேற்கத்திய இந்தியாவில் விவசாயிகளுக்கிடையே முற்றிலும் பரவியிருக்கிறது. தற்போது அவரது பெயரைக் தாங்குகிறது. நூடெப் முறையில் கலப்பு உரம் தயாரிப்பது தனித்தன்மை வாய்ந்தது. இது நல்லதொரு கம்போஸ்ட் உரத்தை தயாரிப்பதில் வெற்றியடைந்துள்ளதன்று. வேறு முறைகளும் இதன் தன்மையை வலியுறுத்தி கூறும். மிகக்குறைந்த மனித முயற்சியும் குறிப்பிட்ட காலக்கட்டத்துக்குள் இந்த விதத்தில் அதிக அளவில் கலப்பு கலப்பு உரம் தயாரித்து பெற முடியும் என்பதிலே இதன் உண்மையான ரகசியம் இருக்கிறது.

10அடி நீளம் x 6அடி அகலம் x 3 அடி உயரம் கொண்ட அமைப்பு உடைய ஒரு தொட்டி தேவையென பரிந்துரைக்கப்படுகிறது. கணிசமான கலப்பின் உரம் தயாரிக்க கிடைக்கிறதென்றால் அதற்கேற்றவாறு நீளம் அதிகரிக்கப்பட வேண்டும். ஆயினும் அதன் அகலம் 6 அடியைத் தாண்டக் கூடாது. தொட்டி செங்கற்களால் மண் கலவையால் பூசி கட்டப்பட வேண்டும். சிமெண்ட் கூட முழுவதும் பயன்படுத்தலாம். ஆனால் அது தேவையற்றது. மூங்கிலையும் பனை ஓலைகளையும் பயன்படுத்தி திடீரென ஒரு தொட்டி ஏற்பாடு செய்வது விலை மலிந்ததாகும். கசிவு ஏற்படுவதைக் குறைக்க அதன் அடி மட்டம் சாணத்தாலும் சேற்று மண்ணாலும் கனக்கச்சிதமாக மெழுகப்பட்டிருக்க வேண்டும். இந்த தொட்டியானது 1350 கிலோ விவசாய கழிவுப்பொருட்கள், 90 கிலோ பசுஞ்சாணம், 1675 கிலோ தூய மண், 1350 லிட்டர் தண்ணீர் ஆகியவற்றை தக்க வைத்துக் கொள்ளும். இந்த பொருட்களெல்லாம் 1–2 நாட்களில் தொட்டியை நிரப்புவதை நிறைவேற்றும் முன்னரே தாயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

Vermiculture by C P Organic Small Group
சிபி ஆர்கானிக் சிறு குபவின் வெர்மிகல்சா

First layer of agricultural waste, second layer of water and dung mixture and third layer of sand This can be repeated several times as long as materials last say in 12-14 layers. The top of tank then should be covered with 7.5 cm thick layer of clay soil mixed with dung. Any cracks that developed in due course can be sealed with mud paste. The top of the tank should be protected from sunlight and heavy rains by covering with organic mulch or by erecting a shed. This tank will produce 2.5 tons of fine compost in 3-4 months.

முதாலம் அடுக்கு விவசாய கழிவு பொருட்கள் உடையதாகவும், இரணடாம் அடுக்கு நீர் மற்றும் சாணக்கலவை உடையதாகவும் மற்றும் மூனறாம் அடுக்கு மண்ணை உடையதாகவும் பொருட்கள் இருக்கும் வரை 12 முதல் 14 அடுக்குகள் வரை பல முறை இதனை திருப்பிச் செய்யலாம். தொட்டியின் மேல் மட்டம் 7.5 செமீக்கு கனமாக சாணமும் களி மண்ணும் கலந்த கலவையால் பிறகு மூடப்பட வேண்டும். காலப்போக்கில் ஏதேனும் வெடிப்புகள் , கீறல்கள் ஏற்பட்டால் மண்கலவையால் அடைக்கப்பட வேண்டும். தொட்டியின் மேற்பாகம் சூரிய ஒளி மற்றும் கனமழையிலிருந்து பாதுகாக்கப்பட ஈர வைக்கோல் கூளங்களால் மூடப்பட வேண்டும் அல்லது ஒரு மேற்கூரை கூடாரராய் அமைக்க வேண்டும். இந்த தொட்டியானது 3 முதல் 4 மாதங்களில் 2.5 டன்கள் உடைய நயமான கலப்பு உரத்தை உற்பத்தி செய்யும்.



Useful Tree

Peepal tree (Bodhi Tree) is a large, fast growing deciduous tree. It has a heart shaped leaves. It is a medium size tree and has a large crown with the wonderful wide spreading branches. It shed its leaves in the month of March and April. The fruits of the Peepal are hidden with the figs. The figs are ripen in the month of May. The figs which contain the flowers grow in pairs just below the leaves and look like the berries. Its bark is light gray and peels in patches. Its fruit is purple in colour. It is one of the longest living trees. Peepal tree is grown throughout India. It is mainly grown in State of Haryana, Bihar, Kerala and Madhya Pradesh. Peepal tree is easily propagated through the seeds or through the cuttings. It can grow in any type of soil. This tree of life has also got the medicinal value. The juice of its leaves extracted by holding them near the fire can be used as the ear drop. Its power bark has been used to heal the wounds for years. The bark of the tree is useful in inflammations and glandular swelling of the neck. Its root bark is useful for stomatitis, clean ulcers, and promotes granulations. Its roots are also good for gout. The roots are even chewed to prevent gum diseases. Its fruit is laxative which promotes digestion and checks vomiting. Its ripe fruits are good for the foul taste, thirst and heart diseases. The powered fruit is taken for Asthma. Its seeds have proved useful in urinary troubles. The leaves are used to treat constipation. People in India collect the Peepal leaves, clean them, dry them and than paint them with the gold acrylic in order to preserve them for years. From the bark of the Peepal tree reddish dye is extracted. Its leaves are used to feed the camels and the elephants. When the leaves are dried they are used for the decoration purpose.

பயனுள்ள மரம்

பீப்பல் மரம் (போதி மரம்) எனப்படும் அரச மரம் பெரிதாக விரைந்து வளரும் இலையிதிர்க்கும் மரமாகும். இது இதய வடிவுடைய இலைகளை உடையது. இது ஒரு நடுத்தர மரம், இதன் பெருத்த தண்டுப்பகுதி சந்திப்பானது அதிசயிக்க தக்க வகையில் அகலமாக பரவும் கிளைகளையும் உடையது. மாரச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் இது தனது இலைகளை உதிர்க்கும் அரச மரத்தின் கனிகள் பல விதைகளை உள்ளடக்கி மென்மையாக இருக்கும். இந்த மென்மையான பலவிதை கொண்ட கனிகள் மே மாதத்தில் பழுக்கிறது. இந்த மென்மையான கனிகள் இலைகளுக்கு கொஞ்சம் கீழே உள்ள பூக்களில் ஜதை ஜதையாக அடங்கி பெர்ரி கனிகள் போன்ற தோற்றம் உடையதாக இருக்கும். இதன் பட்டை சிறது சாம்பல் நிறமுடையதாகவம் பொருக்கு பொருக்காக உரியும் தன்மையையும் பெற்றிருக்கிறது. இதன் கனிகள் கருஞ்கிவப்பு நிறமுடையதாயிருக்கும் இது நெடுங்காலம் வாழும் மரங்களில் ஒன்றாகும். அரசமரம் இந்தியா முழுவதிலும் வளருகிறது. இது குறிப்பாக அரியானா, பீகார், கேரளா மத்திய பிரதேசம் ஆகிய மாநில்ங்களில் வளருகிறது. அரசமரம் சுலபமாக அதன் விதைகள் மூலமாகவும், அதன் கிளை வெட்டுத் துண்டுகள் மூலமாகவும் பரவச் செய்யப்படுகிறது. இது எந்த மாதிரியான மண்ணிலும் வளரக்கூடும். வாழ்க்கைக்கான இந்த மரம் அந்த மருத்துவ பண்பையும் கூடப் பெற்றிருக்கிறது. நெருப்புக்கு அருகில் இதன் இலைகளை பிடித்து வாட்டி எடுக்கப்படும் சாறு காதுக்கு விடப்படும் சொட்டு மருந்தாகப் பயன்படுத்தலாம். இதன் சக்தி வாய்ந்த பட்டை நாட்ப்பட்ட காயங்களை குணப்படுத்த பயன்படுத்தப்படுகிறது. இந்த மரத்தின் பட்டைகள் கழுத்தில் ஏற்படும் சுரப்பி சம்பந்தப்பட்ட வீக்கம் மற்றும் அழற்சிகளுக்கு பயனுள்ளதாகும், இதனுடைய வேர்ப்பட்டையானது வாய்ப்புண், ஆரம்ப கால குடற் புண்களுக்கும் பயன்படுகிறது. மேலும் புண்கள் காய்ந்து குணமடையத் தொடங்குவதையும் மேம்படுத்துகிறது. இதனுடைய வேர்கள் கீல்வாதத்துக்கு நல்லதாகும். ஈறு நோய்களை தடுக்க இதன் வேர்கள் கூட பற்களால் மெல்லப்படுகிறது. இதன் கனிகளை மலமிளக்கும் தன்டையுடையது. ஜீரணத்தை மோசமான ருசி, தாகம் மற்றும் இருதய நோய்களுக்கு நல்லதாகும். இதன் சக்தி வாய்ந்த கனி ஆஸ்துமா நோய்க்கு நல்லதாகும். இதன் இலைகள் மலச்சிக்கலுக்கு சிகிச்சை அளிக்கப் பயன்படுகிறது. இந்தியாவில் ஜனங்கள் இந்த அரச இலைகளைச் சேகரித்து தூய்மையாக்கி அவற்றை காயவைத்து பல வருடங்கள் பாதுகாக்கப்படுவதற்காக பிறகு பொன்னிற அக்ரிலிக் அமில பெயிண்ட் பூசுகின்றனர். அரச மரத்தின் பட்டையிலிருந்து செந்நிற சாயமும் பிரித்தெடுக்கப்படுகிறது. ஒட்டகங்கள் மற்றும் யானைகளுக்கு இதன் இலைகள் காய்நதுள்ள போது அலங்கார வேலைகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

Best Practice

சிறந்த செயல்முறை பழக்கம்

Planting Long Standing Trees with good spacing between each tree

Placepalayam Center was started early 2007. More than 200 Small Groups have joined TIST Program from Placepalayam Center. Many Small Groups from Placepalayam have planted long standing trees like Teak, Mango, Neem, Cashew, Guava, Lemon, Red Cedar and Custard Apple. The members of this center have given enough spacing between each tree to have good growth of all their long standing trees.

நீண்ட காலம் நிலைத்திருக்கும் மரங்களை ஒவ்வொரு மரத்திற்கும் இடையே நன்கு இடைவெளி விட்டு நடுதல்.

பிளேஸ்பாளையம் மையம் 2007 ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்டது. பிளேஸ்பாளையம் மையத்திலிருந்து 200க்கும் அதிகமான சிறு குழுக்கள் டிஸ்ட் திட்டத்தில் சேர்ந்திருக்கின்றன. பிளேஸ்பாளையத்தில் உள்ள ஏராளமான சிறு குழுக்கள் நீண்ட காலம் நிலைத்திருக்கும் மரங்களான தேக்கு, மாமரம், வேம்பு, முந்திரி, கொய்யா, எலுமிச்சை, செம்மரம், மற்றும் சீத்தாப்பழம் ஆகியவற்றை நட்டிருக்கிறார்கள், தங்களது நீண்ட கால மரங்கள் நல்ல வளர்ச்சியை அடைய ஒவ்வொரு மரத்திற்கும் இடையே போதிய இடைவெளியை இம்மையத்தின் உறுப்பினர்கள் விட்டிருக்கிறார்கள்.

Long standing trees like Teak and Mango of Placepalayam
நீண்ட காலம் நிலைத்திருக்கும் மரங்களான தேக்கு மற்றும் மா - பிளேஸ்பாளையம்

Long standing trees like Mango and Cashew of Placepalayam
நீண்ட காலம் நிலைத்திருக்கும் மரங்களான மா மற்றும் முந்திரி- பிளேஸ்பாளையம்

Welcome new members & Small Groups

Tindivanam Center

Tindivanam Center was started during 2007. There are 33 Small Groups in this Center. Groups like Krishna, Naval, Ellaiamman, Sivaji, Muthu, Arunachalam, Annai, Kamaraj, Ashokar, Nethaji, have planted long standing trees like, Teak, Casuarina, Cotton, Mango and Guava. There are about 4,630 trees and 788 seedlings in this center. The Node Meeting Center for all the Small Groups of this Center is at Seanal Village, which is about 2 km from Thellar bus stand.

புதிய உறுப்பினர்கள் / குழுக்களுக்கு வரவேற்பு

திண்டிவனம் மையம்

திண்டிவனம் மையம் 2007 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்ட்டது. இந்த மையத்தில் 33 சிறு குழுக்கள் உள்ளன. கிருஷ்ணா, நாவல், எல்லையம்மன், சிவாஜி முத்து, அருணாச்சலம், அன்னை, காமராஜ், அசோகர், நேதாஜி போன்ற குழுக்கள் நீண்ட காலம் நிலைத்திருக்கும் மரங்களான தேக்கு, சவுக்கு, பஞ்சு, மா மற்றும் கொய்யா நட்டிருக்கிறார்கள், இந்த மையத்தில் அங்கே சுமார் 4630 மரங்களும் 788 விதைக்கன்றுகளும் உள்ளன. தெள்ளார் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 2கி.மீ.ல் இருக்கும் சீநால் கிராமத்தில் இந்த மைய சிறு குழுக்களுக்கான கணுக்கூட்ட மையம் உள்ளது.

Members of Tindivanam Center
திண்டிவனம் மையம் உறுப்பினர்கள்

Question & Answer of the month

We have planted trees, we have signed the GHG agreement, and we are coming for the meeting. Why do you want women members to come for the meeting?

Answer: TIST is not only encouraging to plant trees. TIST is doing several other activities to uplift the small hold farmers to come up in life, and one such activity is women development. We want women members to come forward and be equal to men in all ways. They too have lot of ideas, which would certainly be useful for the program. Lot of IT companies have come up in Chennai since a decade, in which, several women have joined and they are all earning lot with their talents equal to men. TIST India calls for all the women members to come forward and take part in all the activities in TIST program. Women members can also take-up the role of Coordinator or a quantifier.

Where can we get details on sandalwood tree?

Answer: Arulagam Small Group of Mel Kodungalur Center have planted more than 1200 sandalwood trees in Manganallur Village. These trees are more than two years old and the growth is very good. Members who are interested in planting sandalwood trees can attend the Mel Kodungalur / Vandhavasi Node to get details from the members of Arulagam Small Group or call Murahari in 9380937843.

இந்த மாதத்திற்கான கேள்வியும், பதிலும்

நாங்கள் மரங்கள் நாட்டிருக்கிறோம். நாங்கள் பசுமைக் குடில் வாயு ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளோம். மேலும் நாங்கள் கூட்டத்திற்கு வருகின்றோம். ஏன் நீங்கள் பெண் உறுப்பினர்கள் கூட்டத்திற்கு வர வேண்டும் என்று விரும்புகிறீர்கள் ?

பதில் : டிரஸ்ட் மரங்களை நடுவதற்கு மட்டும் ஊக்கம் அளிக்கவில்லை. கொஞ்சம் நிலமுடைய விவசாயிகளையும் வாழ்க்கையில் முன்னுக்கு கொண்டு வர, டிஸட் வேறு பல செயல்பாடுகளையும் செய்து கொண்டு வருகிறது அப்படிப்பட்ட ஒரு செயல்பாடு பெண்கள் முன்னேற்றமாகும். நாங்கள் பெண் உறுப்பினர்கள் முன்னுக்கு வந்து ஆண்களுக்கு நிகராக எல்லா விதத்திலும் இருப்பதையே விரும்புகிறோம். அவர்கள் கூட ஏராளமான யோசனைகளைப் பெற்றிருக்கிறார்கள். ஆவை நிச்சயமாக இந்த திட்டத்திற்கு பயனுள்ளதாக இருக்கும். ஏராளமான தகவல் தொழில் நுட்ப கம்பெனிகள் ஒரு பத்தாண்டு காலமாக தோன்றி இருக்கிறது அதனில் ஏராளமாக பெண்கள் சேர்ந்திருக்கிறார்கள், அவர்கள் எல்லோரும் ஆண்களுக்கு நிகரான தங்களது அறிவுத்திறனால் நிறைய சம்பாதிக்கின்றனர். டிஸ்ட் இந்தியா அனைத்து பெண் உறுப்பினர்களும் முன்னுக்கு வர வேண்டும் என்னும் டிஸ்ட் திட்டத்தின் அனைத்துச் செயல்பாடுகளிலும் பங்கேற்க வேண்டும் அறைகூவல் செய்கிறது (அழைக்கிறது). பெண் உறுப்பினர்கள் கூட ஒருங்கிணைப்பாளர் அல்லது கணக்கெடுப்பாளர் பொறுப்பை ஏற்றுச் செய்யலாம்.

நாங்கள் எங்கே சந்தன மரம் பற்றிய விவரங்களை பெற முடியும் ?

பதில் : மங்கநல்லூர் என்ற கிராமத்தில் மேல் கொடுங்காலூர் மையத்தை சேர்ந்த அருளகம் சிறு குழு 1200 க்கும் அதிகமாக சந்தன மரங்களை நட்டிருக்கிறார்கள். இந்த மரங்கள் இரண்டு வருட வயதுடையதாக உள்ளது. அதன் வளர்ச்சியும் மிக நன்றாக இருக்கிறது. சந்தன மரங்களை நடுவதற்கு ஆர்வமுள்ள உறுப்பினர்கள் மேல் கொடுங்காலூர் , வந்தவாசி கணுமையத்தின் கூட்டத்திற்கு வந்து அருளகம் சிறு குழுவினரின் அந்த உறுப்பினர்களிடமிருந்து விவரங்களை பெறலாம். அல்லது முராரி என்பவரைத் 9380937843ல் தொடர்பு கொள்ளலாம்.

Node Meeting Schedule

Date	Node	Venue	Time
First Saturday	Mel Kodungalur	Government School Mel Kodungalur	5 pm to 6 pm
First Saturday	Semboondy	MariammanTemple Semboondy	7 pm to 8 pm
Second Friday	Vandhavasi	Government School Vazhur, Vandhavasi	4 pm to 5 pm
Second Sunday	Kattiampandal	Vellaputur Village	10 am to 11 am
Third Sunday	Molachur	Keeranallur	10 am to 11 am
Fourth Sunday	Katchur	Katchur Panchayat Office	9 am to 10 am
Fourth Sunday	T B PUram	Government School T B Puram	11 am to 12 noon
Fourth Sunday	Placepalayam	Government School Adisonpuram Church	2 pm to 3 pm

குணுக்கூட்ட பட்டியல்

தேதி	கணுக் கூட்டம்	இடம்	நேரம்
முதலாம் சனிக்கிழமை	மேல் கொடுங்காலூர்	அரசு பள்ளி மேல்கொடுங்காலூர்	மாலை 5-6 மணி
முதலாம் சனிக்கிழமை	செம்பூண்டி	மாரியம்மன் கோவில் செம்பூண்டி	மாலை 7-8 மணி
இரண்டாம் வெள்ளி	வந்தவாசி	அரசு பள்ளி வழூர் வந்தவாசி	மாலை 4-5 மணி
இரண்டாம் ஞாயிறு	கட்டியாம்பந்தல்	வெள்ளப்புத்தூர் கிராமம்	காலை 10-11 மணி
மூன்றாம் ஞாயிறு	மொளச்சூர்	கீரநல்லூர்	காலை 10-11 மணி
நான்காம் ஞாயிறு	கச்சூர்	பஞ்சாயத்து அலுவலகம்	காலை 9-10 மணி
நான்காம் ஞாயிறு	தி.பூ.புரம்	அரசு பள்ளி	காலை 11-12 மணி
நான்காம் ஞாயிறு	பிளேஸ்பாளையம்	அரசு பள்ளி அடிசன்புரம் சர்ச்	மாலை 2-3 மணி